RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt22s415

# ச. தமிழ்ச்செல்வன் சுப்புத்தாய் சிறுகதை - சமூகவியல் நோக்கு

வி. கலாவதி [அ, *]

[அ] தமிழ்த்துறை, இராஜபாளையம் இராஜுக்கள் கல்லூரி, இராஜபாளையம்-626117, தமிழ்நாடு, இந்தியா.

# S. Tamilselvan's Short Story 'Subbuttai' from a Sociological Point of View

**V. Kalavathi** [a, *]

[a] Department of Tamil, Rajapalayam Raju's College, Rajapalayam-626117, Tamil Nadu, India

* Corresponding Author:
skalavathiv@gmail.com

Received: 22-04-2021
Revised: 27-04-2022
Accepted: 02-05-2022
Published: 10-07-2022

Check for updates

## ABSTRACT

Among Tamil writers in the Karisal region, S. Tamilselvan's story, Subhuthai, is said to point to the plight of child labor. The Subhuthai story points to the psychological tendency of a child to express her emotional state in a realistic way while carrying the burden of the family at the age of going to school, and thinking of her mother and the baby in her arms, without talking about education at all. No matter how many short stories have been written about child labor in the history of Tamil short stories, this story highlights the plight of child labor, which is considered a disgrace to society. His story has done an unparalleled job of convincing the upper class through such stories to stop the children working at their homes and send them to school. Another important domain in the works of Tamilselvan are the stories of Subbuthai, Voices, Lunger Boy, Word, and Mynakkal, which tell us about the mental world of children, the stories of the nostalgic crises of children from economically disadvantaged families. Through Subhuthai, the expressions of Karisal children's lifestyle is said to be voiced.

**Keywords:** Tamilselvan's Short Story, Subbuttai, Sociological Point of View

## முன்னுரை

கரிசல் வட்டார எழுத்தாளர்களில் ச. தமிழ்ச்செல்வனின் சுப்புத்தாய் என்னும் கதை குழந்தை தொழிலாளர்களின் அவலநிலையை சுட்டிக் காட்டும் தன்மை உடையதாக விளங்குகின்றது. பள்ளிக்குச் சென்று படிக்க வேண்டிய வயதில் குடும்ப பாரத்தைச் சுமக்கும் ஒரு யதார்த்தமான போக்கில் குழந்தை மன உணர்வை வெளிப்படுத்தும் சுப்புத்தாய் சிறுகதையில் கல்வியைப் பற்றிம் சிறிதும் பேசப்படாது தன்னுடைய தாயையும் தாய் கையில் இருக்கும் பச்சிளம் குழந்தையைப் பற்றி சிந்திக்கும் ஒரு பெண் குழந்தையின் மனஇறுக்கத்தை வெளிப்படுத்தும் உளவியல் சார்ந்த போக்கை இக்கதை சுட்டிச் செல்கின்றது. தமிழ் சிறுகதை வரலாற்றில் எத்தனையோ சிறுகதைகள் குழந்தைத் தொழிலாளர்களைப் பற்றி எழுதப்பட்டிருந்தாலும் இக்கதை சமூகத்தின் அவலமாகக் கருதப்படும் குழந்தைத் தொழிலாளரின் நிலையைக் கரும்புள்ளியாக்கிக் காட்டுகிறது. இதுபோன்ற கதைகளால் தன்னுடைய வீட்டில் வேலை பார்க்கக் கூடிய குழந்தைகளை நிறுத்தி பள்ளிக்கு அனுப்ப வேண்டும் என்று மேல்தட்டு மக்களைச் சிந்திக்கச் செய்யும் ஒரு ஒப்பற்றப் பணியை இவரின் கதை செய்திருக்கின்றது.

சுப்புத்தாய், குரல்கள், லங்கர்பாய், வார்த்தை மற்றும் மைனாக்கள் ஆகிய கதைகள் குழந்தைகளின் மன உலகை நமக்கு விரித்துக் காட்டும் படைப்புகள் அடிப்படையில் பொருளாதார பின்புலமில்லாத குடும்பத்துக் குழந்தைளின் ஏக்கங்கள் நெருக்கடிகள் பற்றி பேசுகிற கதைகள் தமிழ்ச்செல்வனின் படைப்புகளில் மற்றொரு முக்கியமான களமாகும் (Tamilselvan, 2011).

சுப்புத்தாயின் வாயிலாக கரிசல்வாழ் குழந்தைகளின் வாழ்வியலை மையமிட்டு வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

## கதையின் போக்கு

கரிசல் வட்டாரத்தில் விளிம்புநிலை மக்களின் வாழ்வாதாரத்தை மையமிட்டு ஏற்றத்தாழ்வுகள் காணக்கூடிய இன்றைய சமூகத்தில் சாதிய, பொருளாதார பின்னடைவில் விளங்கக்கூடிய குடும்பம் சார்ந்த அவலநிலைகளைக் கரிசல் வட்டார படைப்புகள் அனைத்தும் ஒருவித தாக்கத்தை உள்ளீடாகக் கொண்டதன் வெளிப்பாடாக சுப்புத்தாய் கதை நோக்கலாம். சுப்புத்தாய் என்ற குழந்தைத் தொழிலாளி, தீப்பெட்டித் தொழிற்சாலையில் வேலை பார்க்கின்றாள். அவளின் தாய் காய்ச்சலால் அவதிக்குள்ளாகின்றாள். தாய்க்குத் தாயாகி, தன் உடன் பிறந்தவனுக்கும் தாய்ச் சிந்திக்கின்றாள் சுப்புத்தாய். காய்ச்சல் தம்பிக்கும் வந்துவிடக் கூடாது என்பதற்காக மூன்று நாட்களாக வேலைக்குச் செல்லவில்லை. தம்பியைத் தனியாக அம்மாவிடம் இருந்து பொறுப்போடு சுப்புத்தாயாகிய குழந்தை பாதுகாத்து வருகின்றாள். மூன்று நாட்களுக்குப் பிறகும் சுப்புத்தாயின் அம்மாவிற்கும் காய்ச்சல் விடாததால் தீப்பெட்டி ஆபீஸ் என்று முதலாளியிடம் ஐந்து ரூபாய் கடன் கேட்க வேண்டும் என்ற எண்ணம் குழந்தையாகிய சுப்புத்தாய்க்கு உருவாகின்றது. ஒரு பெண்குழந்தை கல்வியறிவில்லா நிலையில் தன் குடும்ப சூழலை குருவித்தலையில் பனங்காய் என்பது போல சுமப்பதற்குத் தயாராக இருக்கின்றாள். அதுவே கல்விகற்ற நிலையில் ஒரு பெண் இருக்குமானால் அவளின் மனநிலை எவ்வாறு அமைந்திருக்கும் என்பது இக்கதையின் ஆசிரியர் சிந்திக்கத் தூண்டுகிறார். இதுவே பள்ளிக்குச் செல்லக்கூடிய சூழல் சுப்புத்தாய்க்கு இருந்திருந்தால் பள்ளிக்கு விடுப்பு எடுத்திருப்பால், கடன் சென்று கேட்க வேண்டும் என்ற எண்ணம் அவளுக்குத் தோன்றியிருக்காது. அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வதற்குரிய வழிவகைகளை நேரடியாக யோசித்திருப்பாள். ஆனால் என்ன ஐந்து ரூபாய்க்கு என்ன செய்திருப்பாளோ என்ற சிந்தனையோட்டத்தை ஏற்படுத்தும் விதமாக கதையின் முற்பகுதி அமைக்கப்பட்டுள்ளது. உறவினர்களிடம் கூறியிருப்பாள். தந்தை பற்றிய சிந்தனை அவளுக்குள் எழுந்திருக்கும். சுப்புத்தாய்க்கு படிப்படிறிவு இல்லை என்பதால் அவளுடைய சிந்தனை குறுகிய வட்டத்திற்குள் அடைபடுவிடுவதாக அமைந்துள்ளது.

## பேருந்தில் செல்லும் போது சுப்புத்தாயின் மனநிலை

தீப்பெட்டித் தொழிற்சாலைக்குச் செல்லும் சுப்புத்தாய்க்கு வேலைக்குச் செல்லாமல் பேருந்தில் அம்மாவுடனும் கைக்குழந்தையுடனும் சென்றால் கணக்கன் என்ன சொல்வானோ? அம்மா பேருந்தில் ஏறுவதற்கு காசு கேட்பானோ? என்ற எண்ண ஓட்டத்தில் தத்தளித்துக் கொண்டிருக்கும் ஒரு குழந்தை மன உளவியலின் வெளிப்பாடாக இக்கதை கட்டமைக்கப்பட்டுள்ளது. பேருந்தில் பயணம் செய்து கொண்டிருக்கும் போதே தம்பியை இவளே கையில் வைத்திருக்கின்றாள். அம்மாவிடம் இருந்து தம்பிக்குக் காய்ச்சல் வந்துவிடக்கூடாது என்று அன்போடு அவனை பார்த்துக்கொள்ளக் கூடிய பக்குவப்பட்டவளாக தன்னை உருமாற்றிக் கொண்டிருக்கின்றாள். பேருந்தை விட்டு இறங்கும் வரை அவளுக்குள் இருந்த எண்ணங்களை அச்சத்தை ஆசிரியர் சொல்ல முற்படும் போது எண்ணிலடங்கா உத்தி வகைகளை அறிய முடிகின்றது (Tamilselvan, 2011). நனவிலி உத்தி, கற்பனா உத்தி, எதிர்பார்ப்பு உத்தி போன்றவைகளை பேருந்திற்குள் பயணம் செய்யும் சுப்புத்தாய் சிந்தை ஊடாடுவதை நாம் உணர முடிகின்றது.

## கற்பனா உத்தி

சுப்புத்தாயின் மனதில் கணக்கன் எண்ண சொல்லிவிடுவானோ என்றும் பேருந்தில் ஏறாதே என்று கூறுவானோ அல்லது அம்மாவை பேருந்தில் ஏற்றுவதற்கு காசு கேட்பானோ என் அச்ச உணர்வோடு சுப்புத்தாய் பேருந்திற்காகக் காத்திருக்கும் பொழுததெல்லாம் சிந்தித்துக்கொண்டிருந்தாள். ஒரு பள்ளி செல்லும் குழந்தையாக பேருந்திற்காகச் சுப்புத்தாய் காத்திருந்தாள் என்றால் அவளுடைய

மனநிலை இதையெல்லாம் சிந்தித்திருக்குமா? அம்மாவின் உடல்நிலை சரியில்லை என்று மூன்று பள்ளிக்கு விடுப்பெடுத்துச் செல்லும் போது ஆசிரியர் என்ன சொல்வாரோ? விடுப்பு விண்ணப்பம் எடுப்பாரோ? அல்லது தலைமை ஆசிரியரிடம் சென்று தண்டைனை பெற்றுத் தருவாரே என்று தான் அவளது மனம் சிந்தித்திருக்கும். ஆனால் விளிம்பு நிலையில் இருக்கும் சுப்புத்தாய் தன்னுடைய வறுமை காரணமாக குடும்ப பாரத்தை சுமக்கும் வேலையில் அவளுடைய எண்ண ஓட்டங்கள் இவ்வாறு தான் இருக்கும் என்பதை கற்பனா உத்தி மூலம் ஆசிரியர் மையப்படுத்தி உள்ள போக்கு சிந்தனைக்குரியது (Tamilselvan, 2011).

## நனவிலி உத்தி

கற்பனா உத்திக்கு எதிர்மறையாக உலகியல் வாழ்க்கையில் நடைபெறக்கூடிய உண்மைநிலையை நிகழ்கால நிலையை பதிவு செய்வது தான் நனவிலி அல்லது நடப்பியல் எனப்படுகின்றது.

'நடப்பியல் இலக்கியப் போக்கிற்கு சமூக நடப்பியல், வரலாற்று நடப்பியல் என்று பலவகை பரிமாணங்கள் உண்டு. அவ்வகைப் பரிமாணங்களில் சில சிறுகதைகளில் சந்தித்துக்கொள்கின்றன.

1. பாலுணர்வு பிரச்சனை
2. வட்டார இலக்கியப் பாங்கு
3. அங்கதம்
4. நாட்டார் பண்பாட்டு மரபுகளை எடுத்தாளுதல்' (Anandakumar, 2004)

நனவிலி உத்தி என்பது நடைமுறையில் நடைபெற்றுக்கொண்டிருக்கக் கூடிய உணர்வை மனதில் நிறுத்தி இது நடக்குமா? நடக்காதா? என்ற எண்ண ஓட்டத்தை வாசகனுக்கு ஏற்படுத்தும் வகையில் அச்சிறுகதையோ நாவலோ ஒரு வித எதிர்பார்ப்பை உருவாக்கும் எதிர்பார்ப்பை உருவாக்குவது. மேற்கண்ட போக்கில் சுப்புத்தாய் கதையில் தான் வேலை பார்க்கும் முதலாளியிடம் சென்று ஐந்து ரூபாய் கடன் பெற வேண்டும் என்று சுப்புத்தாய் சற்று மன ஆறுதல் அடைகின்றாள். பேருந்தில் கணக்கன் அம்மாவை ஏற்றுவானா என்ற எதிர்பார்ப்பில் இருந்து விடுபட்டு அடுத்ததொரு எதிர்பார்ப்பிற்கு அவள் மனம் செல்கின்றது. வேலை பார்த்த நாட்களுக்கெல்லாம் ஊதியம் பெற்ற பிறகும் வேலை பார்க்காமல் சென்று ஐந்து ரூபாய் கடன் கேட்டால் கொடுப்பாரா மாட்டாரா? என்ற எதிர் பார்ப்புநிலையை அவளுயை மனம் அப்போது சிந்திக்கத் தொடங்குகின்றது.

## எதிர்பார்ப்பு உத்தி

எந்த ஒரு செயலையும் ஆக்கப்பூர்வமான மனநிலையில் இருந்து சிறுகதைப் படைப்பாளன் சிந்திக்க வேண்டும் என்ற உந்துதலை சிறுகதையை வாசிக்கக் கூடியவர்களுக்கும் புதியாக சிறுகதைகளைப் படைக்கக் கூடியவர்களுக்கும் இயல்பிலேயே அமைந்திருக்கின்றது என்பதை ச. தமிழ்ச்செல்வன் சுப்புத்தாய் கதை எழுதிய இவருக்கும் அந்தக் கதையின் மையப்பொருளை உணர்ந்து வாசிக்கக்கூடிய வாசகனுக்கும் ஒரு பாலமாக இந்த கதை அமைந்துள்ளது. இந்த எதிர்பார்ப்பு உத்தி என்பது, கற்பனா உத்தியோடு வேறுபட்டது அல்ல. சற்றேறக்குறைய இரண்டும் ஒன்று தான் என்ற ஒருநிலையை உணரும் விதமான கருத்தாக, முதலாளி ஐந்து ரூபாய் கொடுப்பாரா? என்ற எதிர்பார்ப்பு அந்த குழந்தை இருந்திருக்கிறது. முதலாளி கொடுத்தால் கூட கணக்கன் கொடுக்க விடுவானா? என்று அந்தப் பச்சிளம்பெண் குடும்ப பொறுப்புணர்ந்து சிந்திக்கும் மனப்பான்மை உடையவளாகச் சித்தரிக்கப்பட்டிருக்கின்றாள் என்று சொல்வதைவிட வாழ்ந்திருக்கின்றாள் கதையில் என்று தான் சொல்ல வேண்டும். ஒரு விளிம்புநிலைக் குழந்தையே தன் தாயையும் தம்பியையும் சிந்திக்கும் போது இந்த குழந்தைகளைப் பெற்ற தகப்பன் என்னவானன் என்ற எதிர்பார்ப்பை வாசகர்க்கும் ஏற்படுத்தும் விதமாக சிறுகதையில் எதிர்பார்ப்பு உத்தி பின்பற்றப்பட்டுள்ளது.

## குழந்தை உளவியல்

சமூதாயத்தில் எத்தனையோ சிக்கல்கள் பேசப்படக் கூடியதாக இருக்கின்றன. அந்த சிக்கல்களை எல்லாம் ஒட்டுமொத்தமாக ஒரு அடிப்படையான கருத்தாகக் கொண்டு குழந்தை மனநிலையில் சிறுகதை ஆசிரியல் சிந்திக்கத் தூண்டுகிறார். இளம் வயதிலேயே குடும்ப பாரம், பொருளாதாரச் சிக்கல், உடல் நலம் சார்ந்த பிரச்சனைகள், ஏமாற்றம் இவற்றை குழந்தையின் உளவியல் வாயிலாக பொறுப்புணர்வோடு குடும்ப அங்கித்தினர்கள் செயல்படவேண்டும் என்ற எதிர்பார்ப்பினையும் கொண்டு செலுத்தும் விதமாக கதையின் போக்கு அமைந்துள்ளது. பாலியல் என்வென்று அறியாத வயதில் அதைப் பற்றிய சிந்திக்நோக்கா மனம் கொண்ட வயதில் சுப்புத்தாய் தீப்பெட்டி தொழிற்சாலைக்குச் சென்ற போது முதலாளி ஐந்து ரூபாய் காலம் தாமாதம் செய்து கொண்டிருந்த அந்த வேலையில் கைக்குழந்தைக்கு பாலூட்டிக் கொண்டிருந்த அவளின் தாயின் குரல் கேட்டு ஐந்துரூபாய் பெறுவதற்கு முன்பே அவளின் மனம் பதைபதைத்துக்கொண்டிருக்கின்றது. ஐந்து ரூபாய் பெற்றுத் திரும்பும் போது கணக்கனிடன் அவளின் தாய் சண்டையிட்டுக் கொண்டிருக்கின்றாள். பாலியல் வன்மமும் வக்கிரப் புத்தியும் கொண்ட கணக்கனின் கண்கள் குழந்தைக்குப் பாலூட்டுவதை பார்த்துக்கொண்டே இருந்திருக்கின்றான். இதற்காகத்தான் பேருந்தில் ஏறுவதற்கு இடம் கொடுத்தானோ? இதற்காகத்தான் முதலாளியிடம் சொல்லி ஐந்து ரூபாய் பெற்றுத் தருவதாகச் சொல்லியிருப்பானோ என்ற குழந்தை மனப்போராட்டம் நடத்துகின்றது. தனது தம்பிக்கு காய்ச்சல் வந்துவிடக்கூடாது என்று தாயிடம் இருந்து குழந்தையை வாங்கிக்கொண்டு அரசுமருத்துவ மனைநோக்கி நடக்கத் தொடங்கினாள். அம்மாவிடம் என்ன நடந்தது என்று கேட்காமலே புரிந்து கொண்ட மனநிலை கொண்டவளாக சுப்புத்தாய் கதாப்பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு குழந்தைகளுக்கும் தன்னுடைய தாயின் மனநலம் பற்றிய புரிதலை கொண்டிருப்பார்கள் என்பதை எதார்த்தமாக கதை எடுத்துக்காட்டுகின்றது.

சுப்புத்தாயின் தாய் இரண்டு பிள்ளைகளை வளர்க்க அவர் படும்பாட்டை விட சுப்புத்தாய் என்ற குழந்தை தன்னுடைய தாயையும் தம்பியையும் பாதுகாக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தான் இந்தக் கதையில் விஞ்சிநிற்கின்றது.

காந்தியடிகள் ஒரு பெண் கல்வி கற்றால் ஒரு குடும்பம் மட்டும் அல்ல ஒரு நாடும் பிழைக்கும் என்பார். இந்தக் கதையில் விளிம்புநிலை பெண்குழந்தை தன்னைச் சுற்றி இருப்பவர்களைக் காக்க எவ்வளவு பாடுபடுகின்றாள். இதுவே அவளுக்கு கல்வி அறிவு முழுமையாகக் கிடைத்தால் எத்தனையோ விளிம்புநிலைத் தாய்மார்களையும் குழந்தைகளையும் கடைத்தேற்றம் செய்ய ஆயத்தப்படுவாள் என்ற ஒரு எண்ணத்தை ஏற்படுத்தும் விதமாக கதை அமைந்துள்ளது பாராட்டுக்குரியது.

## கதையில் சுட்டப்படும் சமூகசிந்தனை

சுப்புத்தாய் தன்னுடைய தாயை அழைத்துக்கொண்டு மருத்துவமனைக்கு செல்கிறாள். இங்கே ஏற்பட்ட ஒரு அதிர்நிலையான மனநிலையுடன் சென்ற அவர்களுக்கு அங்கேயும் வரிசையில் காத்திருக்க வேண்டிய அவலநிலை. காய்ச்சல் அதிகப்படியாக இருக்கும் காரணத்தால் காய்ச்சலின் அதி தீவிரத்தை அதற்கு முன்பு நடந்த நிகழ்வை நோக்கும் போது வரிசையில் நிற்பது என்பது சிரமத்தை ஏற்படுத்துகின்றது. அரசு மருத்துவமனை செவிலியரிடமும் சுப்புத்தாய் தாய் தன்னால் வரிசையில் நிற்க முடியாது என்று வாக்குவாதத்தில் ஈடுபட்டு வார்த்தைகளால் மேலும் காயப்படுத்தப்படுகின்றாள். அதுவும் சுப்புத்தாயால் தாங்கிக் கொள்ள இயலவில்லை. வறுமையின் உச்சத்தில் இருக்கும் அவர்களுக்கு அடுத்தவேளை உணவிற்கு உணவிற்குக் கூடிய வழியின்றி வாழ்வா சாவா என்ற போராட்டத்தின் எச்சத்தைச் சுமந்து கொண்டு மாத்திரைகளைப் பெற்றுத் திரும்புகின்றாள்.

'கொடிது கொடிது வறுமை கொடிது என்று அவ்வைக்கிழவியும் பாடினாள். ஆனால் வறுமை சமுதாய நிதர்சனமாக இருந்து வந்திருக்கின்றது. இல்லை என்ற சொல்லை உலகில் இல்லை என்று வைப்பேன். என்று பாரதி முழங்கிய போது வர்ணனையாக அன்றி வறுமை வெறும் வர்ணனையாக அன்றி மாற்றப்பட வேண்டிய பொருளாகக் காட்சி தந்தது' (Kailasapathy, 1983).

அடிப்படையான பொருளாதாரச் சிக்கல்களும், உணவு உடைக்கும் துன்பப்படும் சூழலிலும் தன்னை எவ்வாறு உருமாற்றிக் கொள்வாளோ இன்று அந்த சுப்புத்தாய் எங்கிருக்கின்றாளே என்பதை ஆசிரியர் கதையின் இறுதியில் விட்டுச்செல்கின்றார்.

## முடிவுரை

மண் சார்ந்த இலக்கியங்கள் என்பது மண்ணின் வாசனையை படைப்பினூடாக வெளிப்படுத்துகின்றது. அவ்வகையில் கரிசல் சிறுகதைகளில் எப்போதும் ஆலைகளின் அவதானிப்பின் வாசனையே விஞ்சி நிற்பதாக உள்ளது. கரிசல் நிலப்பகுதிக்கான விளைச்சலைத்தவிர வேறொன்றும் அங்கு விளைவிக்கப்படுவதில்லை. எனவே அங்கு வாழும் மக்களுக்குத் தேவையான வாழ்வாதாரத்தினை தீப்பெட்டி ஆலைகளிலும், வெடிகள் செய்யும் ஆலைகளிலுமே தேடிக்கொள்கின்றனர். வறுமையை மட்டுமே பெற்றுக்கொள்வதற்கான ஊதியமாக இருக்கின்றது. சிறுவர்களும் தங்களின் வயிற்றுப்பாட்டிற்காக வேலைக்குச் செல்லும் அவல நிலையினை அம்மக்கள் பெற்றுள்ளனர். ச. தமிழ்ச்செல்வனின் சுப்புத்தாய் கதை வறுமையான வாழ்வியலுக்கான போராட்டத்தின் நடுவே வக்கிரப்புத்திகளின் அவதானிப்புகள் படுத்தும் பாடுகளும் இங்கு நம்மை சிந்திக்க வைப்பதுடன் சிறுவர்களுக்கான கல்வித்தேவையும், சமூகத்தின் வக்கிரப்புத்திகள் குழந்தைகளுக்கு கற்றுக் கொடுக்கும் பாடமும் நம்மை நெகிழச் செய்கின்றது. சமூகம் பாடம் கற்றுக் கொடுக்கும் என்ற வார்த்தைகளுக்கான பொருண்மையாக இதனை எடுத்துக்கொள்ள முடியுமா? வாழ்வியலுக்கான அடிப்படைத் தேவையான ஒரு வேளை சோற்றுக்காக அவர்களின் போராட்டக் களத்தினை சிந்திக்க வார்தைகளுக்கு வறுமையளிப்பதாக மௌனம் கொள்ளச்செய்கின்றது.

## References

Anandakumar, B., (2004) Ilakiyamum Panpaatu Marabugalum, New Century Book House, Chennai, India.

Kailasapathy, K., (1983) Ilakkiya Sinthanai, Kumaran Puthaga Nilaiyam, Chennai, India.

Tamilselvan, S., (2011) Sirukathaigal, Bharathi Puthakalayam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License